உ கணபதிதுணை.

பாண்டிநாட்டிற் சிங்கபுரத்திலிருக்கிற

உலகம்மைக்

கலித்துறையந்தாதி.

நமசிவாயப்புலவர்

பாடியது.

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையர்

முன்னிலையில்.

காஞ்சீபுரம், ஆறுமுகதேசிகர்குமாரர்

குமாரசுவாமிப்புலவரால்

பரிசோதிக்கப்பட்டு

இவராலும்,

சைதாபுரம் ஐயாசாமிமுதலியார்குமாரர்

உமாபதிமுதலியாராலும்

சென்னபட்டணத்தில் - தி - விசாகப்பெருமாளையர்
கல்விவிளக்க வச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ஹேவிளம்பி௵ ஆனி௴ — இதன்விலை - அணா, ௪.

1837

ஹரः

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உலகம்மைக்கலித்துறையந்தாதி.

காப்பு.

முந்தாதிவேதப் பொருளாகுஞ் சிங்கை முதல்வியுல....*
கந்தாதி பாட வருள்செய்யு மேயெந்தை யார்சடைமேல் *
பிந்தாதி மாகர சந்திர ரேகை பிடித்திதழிச் ....*
செந்தாதி னூலொர் சிவப்பேற்றுந் தாழ்கைச் சிறுகளிறே.

உலகே பொதிய மலைப்பா ரிசநின் றுலாவுசுமங் ....*
கலகே கயநடங் கண்டிருப்பாயிருக் காதிமறைப்..........*
பலகேள்வி யுண்மைப் பொருளேயுன் பாதம் பணிவணப்பால் *
விலகே னெறியை விலக்கேன் வினையை விலக்குவையே....(க)

விலக்குந்தரமல்ல வேலையம் புலாதிக்கும் வேள்பகைக்கும்....*
இலக்குந்தமியனு மென்னெஞ்சு மோநெட் டிருல்வழிதேன்..*
கலக்கும் பொருளைத் துறைமுக் களாவையன் கைபுனைநித்.. *
திலக்குங் குமமுலை யாயிது வோவுன் திருவுள்ளமே......(உ)

உள்ளத் திறங்க ளுலகே யுனக்கிங் கொளிப்பதென்ன..........*
கள்ளத் திறங்களென் கன்மமன் றேநிட் களங்கமனப் ...... *
பள்ளத் திறங்குமுன் னுற்பல தாராக்ரு பாநதிநீர்.... .... *
வெள்ளத் திறங்குவ தெந்நாள் சனன விடாய்கெடவே.......ங)

கெடுவா யெனையுங் கெடுப்பாய் மருண்டு கிலேசம்வந்தால்....*
படுவாயுன்னோடு படுபவ ரார்வினைப் பாசநெஞ்சே ....*
விடுவாயென் னம்மை யுலகா ளிடத்தின்பு வேண்டிலன்பு....*
நடுவா யவள்பத நாவாய் சனன நடுக்கடற்கே............(௪)

கடலுந் தரங்கமும் போலுல கேநிறை கன்மமும்பா.......*
முடலுந் தொடர்ந்த வுறவென்சொல் கேனுறு கோடிதழி....*
மடலுங் குலைந்த மதுவூற்ற வெந்தை மதிச்சடைமேல்......*
படலுஞ் சிவந்தபதம்பாடி யுன்னையும் பாடியுமே.......(௫)

பாடுங் கவிக்கிரங் காயுல கேகொடும் பாவிக்குநீ.........*
கூடும் புசிப்பன்றிக் கூட்டுவை யோதன்னைக் கொண்டுதப்பி ..*
ஓடுந்தனை யுமுழைத்திடுங் காலிவ் வுயிரகன்றால்............*
வாடும் பிறகிந்த மண்ணோ டறுதியிம் மண்ணுடம்பே.....(௬)

மண்கொள்ளு மோவந்த விண்கொள்ளு மோவுன் மகிழ்நர்மனத்
தென்கொள்ளு மோவிஃ தேதோ வதிசய மெண்ணியெண்ணிப்*
புண்கொள்ளு மோர்புன் மதியேனுங் காணவிப் போதிரண்டு *
கண்கொள்ளு மோவுல கேயின்று நீநின்றகட்டழகே......(௭)

கட்டிய செம்பட்டு முத்தா ரமுநின் கணவனைப்போய்த்......*
தெட்டிய கண்ணுந் திருத்தோடுந் தோளுந் தெளித்துநறுக் *
கொட்டிய மென்மலர்க் கூந்தலுஞ் சாந்தக் குழம்பலம்ப....*
முட்டிய கொங்கையு மாயுல கேவந்தென் முன்னிற்கவே...(௮)

நிற்கும் பகிரண்ட மெல்லாந் தகர்த்துதிர்த் தூளிபடப்......*
பொற்குன்ற மும்பொடி யாகநின் றாடும் புனிதர்தம்மை....*
விற்குங் கடைக்க ணுலகேயுன் மாய விலாசவுண்மை.........*
கற்கும் பெரியசல் லாற்சிறி யேனெங்ஙன் காண்பதுவே..(௯)

காணக் கிடைத்தது நின்றிருக் கோலமென் கள்ளமனம்.......*
பூணக் கிடைத்ததுன் பொன்மலர்த் தாளுன்னைப் போற்றிசெய்ய
பேணக் கிடைத்த துலகெனும் பேர்பெற்ற பேறுகண்டு ....*
நாணக் கிடைத்ததொன் றம்மா வதையென்ன நான்சொல்வதே.

சொல்லப் படாதுல கம்மநின் பேரெழிற் றோற்றமப்பால்...*
செல்லப் படாதி திகைத்துநின் றேன்பற்றிச்சிற் றுளியால்...*
கல்லப் படாத கரும்பாறை நெஞ்சைக் கரைத்தினிமேல்......*
வெல்லப் படாதெழு மோகாந்த காரத்தை வெல்லுவையே. (௰௧)

வெல்வாயெ னம்மை யருளாற் புலன்களை வேங்கைகண்ட....*
புல்வா யெனவஞ்சும் புன்மைநெஞ் சேபிறை போலெயிற்று ..*
வல்வா யமன்வரு மோவுல கேயென்று வாய்திறந்து........*
சொல்வாய் விழிக்கினுஞ் சோர்வா யிறக்கினுந் தும்மினுமே. ௰௨

தும்முங் கனன்முத் தலைச்சூல பாணிநெஞ் சுக்குள்வைத்துச் . *
செம்மும் புதையற் றிரவிய மாமுன் சிலம்படியை..........*
விம்மும் புளக தனத்துல கேயென் மிடறுளைந்து ....*
கம்மும் படியித் தனைநாட் கதறியுங் கண்டிலனே...... (௰௩)

கண்டத்தி லேயன்று சற்றே கறுத்த கறுப்பனிலாத்.........*
துண்டத்தி லேசெஞ் சுடர்காட்டு பாதத் துணைதுணையா......*
அண்டத்தி லேகண்ட தெல்லாமென் னம்மையடியர்தங்கள் .. *
பிண்டத்தி லேகண் டிருப்பார்கற் பாந்தரம்பின்னிடவே. (௰௪)

பின்னிட்ட கொந்தள பாரத்தின் மாலைப் பிரசமுண்டு......*
தென்னிட்ட வண்டின் சிறைக்காற்று மூர்ச்சனை தீர்க்கவந்து ..*
முன்னிட்டு நின்றென் னுயிர்விடுங் காற்பத மூந்தருவாய்....*
என்னிட்ட மிங்கி துலகே யுனக்கிட்ட மெப்படியே......(௰௫)

எப்படி நீதுணை செய்குவை யோவறி யேன்பிழைத்த.... ..*
தப்படி யேனிச் சனனத்தி லேதள்ளத் தக்கதன்றால் .... *
அப்படி யேழு பிறப்பினுஞ் சூழ்மல் லாற்பகட்டுக் ... . *
கப்படி யூர்திக் கென்மேலெத் தினமுங் கடிந்தரவே.... (௰௬)
[ணே
தரமேற்சென் றண்டிப்பொருட்டாற் பிறர்வைபத்தாழ்ந் துமண்
மரமோவிங் கெப்படிக் கேட்பதம் மாவிந்த வாழ்க்கையென்ன*
திரமோபுன் சன்ம மினிப்போது நீவைத் திருந்ததிக........*
பரமேவுன் பொற்பதந் தாவுல கேபடும் பாடறிந்தே.... (௰௭)

அறியாத தொன்றை யறிந்தனு பூதிவந் தானந்தமாய்ப்...... *
பிறியாது நின்ற ப்ரபஞ்சமெல் லாந்தள்ளிப் பின்னேயொன்றும்
குறியா திருந் துனைக் காணு விடிற்பிழைக் கும்படிக்கோர் .... *
நெறியாதுங் கண்டதுண் டோவுல கேசொல்லு நீயெனக்கே.௰௮

எனக்கே சகாவுனை யன்றியுண் டோவென் றிருளறிக்கும்.... *
கனக்கே சபார.க் கரும்பை நெஞ்சேயொருக் காணினைத்தால்.. *
தனக்கே சரீரம் பகுந்தானை வாழ்வித்த தாயெளிவந்......... *
தனக்கே சகாயம் புரிவாளோர் சிற்பத மூன்பதமே.....(௰௯)

பதமென்ற தாமரைப் பூவுக்கு ளாறு பதச்சுரும்பாய்...... *
இதமென்று போயிருந் தாயிலை யேமூடை யாக்கையைப்புத் .*
புதமென்றுதாயுல கைப்பணி யாதென்ன புத்தியிதைச் .... *
சதமென்றுநீகெடுத் தாய்மன மேயெனைச் சந்ததமே....(௨௰)

சந்தன பாரத் தனம்பிதி ரோடத் தமிழ்மறைச்சம்.......... *
பந்தன வாவறப் பால்கொடுத் தாய்விருப் பாதிகள......... *
பெந்தன மாயிச் சடஞ்சுடு காட்டுப் பெருநெருப்புக்...... *
இந்தன மாகத் தமியேனு நெஞ்சு மிருந்தனமே.........(௨௧)

தனத்தாசை யுண்டது நின்பூ சனையெண்ணிச் சற்சனங்க. ... *
வினத்தாசை யுண்ட துனக்கன்பு வேண்டிரகசியவுற்........ *
பனத்தாசையுண்டது சிற்பதங் காமித்த பாதகனேன் ...... *
மனத்தாசையிவ்வள வம்மா வுலகுண்ட மாறங்கையே... (௨௨)

தங்கங் குழைத்த மூலைத்தாள மொற்றித் தனிக்குழையா.... *
னங்கங் குழைத்தவென் னம்மா சற்றேனு மகங்குழையாப் .. *
பங்கங் குழைத்த புனல்போற் கலங்கிப் பரந்துதிரிந்........ *
தெங்கெங் குழைத்து வளர்ப்பதென் சாண்குழி யிம்மட்டுமே.
[(௨௩)
மட்டுண்டதென்றெண்ண வேண்டாம்பிறர் தலைவாயிலிற்போய்த்
தட்டுண் டலைந்து தடுமாறித் தீவினைச்சங்கிலியால்.......... *
கட்டுண்டதென்னசொல் வேனுலகேயொருக்காலுமெய்த்தோர்க்
கிட்டுண்ட திங்கில்லை யேற்றுண்டு நான்பட்ட தின்னமுண்டே.

இன்னம் பராமுக மேனடியார்க்கு மெனக்கு மென்ன · · [(௨௪)
பின்னம் பராபரித் தார்பிழை யோமனப் பேய்க்கிசையப் · · *
பொன்னம் பராபரை நல்குமென் றேசில புத்தியென்ன · · · · *
முன்னம்ப ராடப் படித்த சங்கீத மொழிக்கரும்பே · · · · (௨௫)
[பே

கரும்போ வெனுஞ்சொல் லுலகேயென் விண்ணப்பங் கள்ளரும்
யரும்போல்வ னென்சொன் மொழிவதன் றேகுறிப் பாலிரக்கம்
வரும்போ விருந்ததும் வாராதெனவு மதிமருண்டேன் · · · · *
இரும்போ விரும்பல்ல வோவறி யேனுன் னிதையத்தையே. ௨௬

இதையத் தெறித்த விருண்மாற்றி நின்னரு ளின்றிரவி · · · · · *
யுதையத் தெறித்த வெயிலொக்கு மேநின்று சூழறுகால் · · · · *
புதையத் தெறித்த மதுக்கொன்றை யார்தம் புரிசடைக்கா · · · · *
டதையத் தெறித்த பதத்தா லலைக்கு மரும்பிடியே. · · · · (௨௭)

பிடிபட்ட தன்றன் சொருபத்தி யானம் பிறந்துபிறந் · · · · · · *
தடிபட்ட சன்மமென் றாட்படுமோநின் றதிர்படுமெவ் · · · · · · · · *
விடிபட்ட வெவ்வர வென்னநொந் தேனுல கேயெனக்கிப் · · *
படிபட்ட துன்ப மினிப்போது நீமுகம் பார்த்தருளே. · · (௨௮)

அருளுக்குத் தென்மலைச் சந்தனச்சார லகண்டிதசிற் · · · · · · · *
பொருளுக்குச் சிங்க புரத்துல காளுக்குப் பூங்குழலின் · · · · *
சுருளுக்குப் பைம்புயரேற்கநின் றாளுக்குத் தொண்டுபட்டும் *
இருளுக்குச் சிந்தையிடைப்படு மேலுண்மை யென்படுமே. (௨௯

படுக்கின்ற கண்ணியிற் பட்டடுபட்ட பறவையைப்போல் · · · · *
எடுக்கின்ற சன்மத் திடைப்பட்டுவீணி லிகபரமும் · · · · · · · · · · *
கெடுக்கின்ற கன்மங் கெடுப்பதென் றேவன்பர்கேட்டதெல்லாம்
கொடுக்கின்ற கற்பகக் கொம்பே யசல குலவல்லியே. · · · · (௩௰)

குலவல்லி மேனை குமாரத்தி யூரற் குறுமுளைநித் · · · · · · · · · *
திலவல்லி சூடகச் செங்காந்த ளேந்துபைந் தேங்கமழுற் · · · · *
பலவல்லி தாமரைப் பூவல்லி மெல்லப் படக்கன்றுதாள் · · · · · · *
நிலவல்லிசூட மலயா சலப்பக்க நின்றபொன்னே. · · · · · · (௩௧)

பொன்னாசையுமட்டப் பூவைய ராசையும் போலவிலத்... .. *
தின்னாசையுமெனக் கின்னாசெயு மிதற் கேதுசெய்வேன் ....*
உன்னாசை மேற்கொண்டுவாழ்முக்களராவன யோகியென்போன்
றன்னாசை நோய்க்கு மருந்தே கல்யாண சவுந்தரியே....(௰௨)

தரியே னுன்பேரன்பி·மற்றவர் பேணையுன்சன்னிதியைப்.... *
பிரியே னினியிந்தப் பேயென்பிறவி பிறந்திறந்து........ *
திரியேன் வறுமைக் கென்செய்வேன் றவர்பின்பு சென்றுபரி *
கரியே னுலகம்ம யேறென்ன வேண்டக் கடவதுவே... (௰௩)

கடவுங் கடுநடைக் கார்மேதி யூர்திதன் கையிலகப்......... *
படவுங்கெடவுங் கடப்படு மோவின் பகிரதிபோய்த்..... *
தடவும் பவளச் சடையா னலர்ந்தசெந் தாமரைக்கை...... *
தொடவுஞ் சிவந்த பதத்துலகாளைத் துதிசெய்துமே.... (௰௪)

துதிசெயுந் தொண்ட·னெனக்கேமுழுதுந் துணைச்செய் துமெல்
விதிசெயுஞ் செய்கை வெறுஞ்செய்கை யாய்விட வேறுசெய்த*
ததிசெயுந் தன்பதங் காட்டுங்கொலோ தரங் கப்பொருனை....*
நதிசெயுங் கம்பலை நீங்காத சன்னிதி நன்னுதலே...... (௰௫)

நுதலைக் கிழித்துப் புறப்பட்ட தீக்கொலை நோக்கின்முழு .. *
முதலைத் தமிழ்ச்சிங்கை முக்களவீசனை மோகஞ்செய்யும் ...*
திதலைக் குரும்பைக் கரும்பேயுன் பல்லவச் சில்லரிப்பூங்.... *
குதலைச் சதங்கைப் பதங்களுக் காட்பட்டுக் கொண்டனனே௰௬)

கொண்டே னுளத்துல கம்மநின் னூபுரக் கோகனகம்...... *
கண்டேனொருவருங் காணாத காட்சியைக்கற்பகப்பூந்...... *
தண்டெனுகர்ந்து களிதூங்கு மோர்சஞ் சரிகமென்ன...... *
உண்டே னிருந்தரு ளானந்த மாமயிர் தோதகமே......(௰௭)

ஓதனமான் விடத்தா ரொழுத்திட்ட வொப்பவிலைச்........ *
சாதனவோலையந் தாழ்குழை யாள்பதந் தன்னைநெஞ்சே ....*
மாதனமாக மதித்தன மோகெடு வாய்மருண்ட ....*
சேதனமாக விருந்தோம் பிறந்தென்னசெய்தனமே.... (௰௮)

செய்தவம் போதன் முதலோ ரிதுவென்று தேர்வமலர்ப் .. *
பெய்தவம் போருகப் பெண்பெரு மாளெம் பிராட்டியையென்
கைதவம் போத வுலகேயென் றேத்திலன் காலனினி ...... *
வைதவம்போத விழைத்தாய் பிழைத்தென்று வாதிக்குமே. (௩௯

வாதித்தலைத்த வினைமாற்றி வாயுவை மட்டிருத்திச் .... *
சாதித்தசித்தி தரும்யோகசாதனை தன்னி லொன்றிப் ..... *
பேதித்த தத்துவ மெல்லாங் குளானந்தப் பேரமுதால் ... *
சோதித் தவர்க்கென் னுலகாளருள்வந்து தோற்றிடுமே .. (௪௰)

தோற்றேன் வினைப்பகை யைம்புலவேளிருஞ் சூழ்ந்துமளந் .. *
தேற்றே னறிவைச்சிறைப் படுத்தார்பசுந் தீங்குதலைக் ...... *
கோற்றேன் மொழியுல கம்மாசும்மாவவர் கோட்டிகொள்ளர் .. *
ஆற்றே னினிச்செய லற்றே னுனக்கின் றடைக்கலமே... (௪௧)

கலசந் திருமுனிக் காமணக் கோலமுங் காட்டிமந்தா .... *
னிலசந் தனகிரிச் சாரனின் றேளமுன் னீதிமறைக் .... *
குலசந் ததிக்குணப் பால்கொடுத் தாளையுட் கொண்டிருந்தும் *
சலசந் திரசஞ் சலப்படுநெஞ்சைத் தடுப்பதென்றே .... (௪௨)

என்றைக்கு நீதுணை யம்மாவென் றுவி யிறந்துவிடும் .... *
அன்றைக்கு மோடிவந் தஞ்சலென் பாய்நச் சராவணையான் .. *
மின்றைக்கு மாலையங் கோமர காந்தி விளங்குபொலங் .... *
கொன்றைக்கு மேற்றிய பொற்றுட் சிமையக் குலக்கொழுந்தே.

கொழுந்து நிலவும் பிறைமண நாறுங் குழகன்முடிக் .... *
கழுந்து வரிவிற் கனகா சலத்துன் கணவனொடும் .... *
எழுந்து விடையிற் புறப்படு வாயுல கேயினிப்போய் ...... *
விழுந்து நிலாய்த் தழுந்தா தென்னுவி விடும்பொழுதே .. (௪௪)

பொழுது கழிந்த துவீ ணேயெனக்கென்ன புத்தியுன்னைத் .... *
தொழுது பணிந்து துதித்தில னேயிதைச் சொல்லிச்சொல்லி *
அழுது புலம்பில் விடுமோ யமனினி யாயினுமென் .... *
பழுது களைந்து புரப்பா யுலகம் படைப்பவளே .... (௪௫)

படைப்பா ரொருவ ரளிப்பா ரொருவரப் பாலொருவர்....❋
துடைப்பார் பிறகு தொழில்வே றிரண்டு தொகுத்துவகுத்..❋
தடைப்பா ரிருவ ரெனத்திரி வாருல கம்மசற்றுன்...........❋
கடைப்பார்வை செய்கின்ற தொன்றலைந்தாதிக் கக்காருமே.௪௬

காறுந் துவர்க்கும் புளிக்குங்கைப் பாமென் கவிமுறைப்பா..❋
டேறுந் திருச்செவிக் கேறுதென் றானு மெளியனுன்பேர்....❋
கூறுந் தொழில்விட்டு மற்றோர் தவஞ்செய்து கொண்டுநின்னைத்
தேறும் படிக்குல கம்மாவென் பாழ்மனஞ் செவ்வல்லவே. (௪௭)

செவ்விக் கலையின் மதியே மதியெனத் தீமையராக்..........❋
கௌவிக் கிடந்ததுங் கண்டிரங் காயெந்தை கண்ணுதலான்..❋
நௌவிக் கருங்க ணுலகேபொன் னாசையி னாற்பிறனா......❋
வெளவித் திரிந்தன னிப்படி யோவென்னை வாழ்விப்பதே.(௪௮

வாழ்வித்த தொன்றிலை யிந்நாள் வணாயும் வறுமையினால்...❋
தாழ்வித்த தீங்கொரு சற்றல வேயித் தனையுநீக்க....[டேன் ❋
வீழ்வித்த தென்னை யடுங்கொடு நோய்க்குள்வெவ் வேறுகெட்
ஊழ்வித் தகமென்ன சொல்வே னுனக்கென் னுலகம்மனே.௪௯

அம்மனை பந்து கழங்காய்க் குலாசல மத்தனையும்........❋
எம்மனை யங்கை யெடுத்தாடு நாளுல கீன்றெடுத்த ....❋
செம்மனை நுண்மருங் கிந்திரா கேள்வனத் தேவரொல்லாம் ..❋
தம்மனையென்று புகுவாரி வண்மலர்த் தாளிணைக்கே....(௫௰)

தாளென்ற கிண்கிணிப் பங்கயப் பூவைத் தலையின்முடித்....❋
தாளென்று சொன்ன தனேகமுண்டே யுன்னை யாதரித்தும்..❋
கோளென்ற வல்வினை தீரா விடிலைய கோபிழைக்கும் ....❋
நாளென்று மங்கல கல்யாணசுந்தர நாயகியே..........(௫௧)

நாயக மண்டல முக்கோணத் தேயுன்னை நாடுமிந்த........❋
பேயக மண்டர்தம் பேறெண்ணு மோபெரும் பேருவரி....❋
போயக மண்டமுன் காவிரி யீந்தருள் புங்கவன்கைத்......❋
தூய கமண்டல நன்னீர்ப் பொருனைத் துறையன்னமே. (௫௨)

அன்னம் பழகும் பிடிநடை யாளுல கம்மைசெம்மை ....*
கன்னம் பழகுங் கயற்பார்வை வெள்ளக் கருணைக்குளே .... *
முன்னம் பழகும் பழவடியாரை முழுது நம்பி.............*
இன்னம் பழகும் பழகுமொன்றாய் நின்ற வின்பங்களே. (௫௩)

இன்பந் தருநல் வினையில்லை யோவெளி யேற்குளது ...... *
துன்பந் தருங்கொடுந் தொல்வினையோ வெந்தை சோகங்கண்டு
முன்பந் தரதுந்துமி பொங்கி மாசல முன்றிவிட்ட.......... *
நன்பந் தரினின்று சற்றே கவிழ்ந்து நகைத்தபெண்ணே. (௫௪)

பெண்மைத் திருவுருப் பெம்மா னுடம்பிற் பிறர்க்குணர்த்தும்*
உண்மைப் பொருளை யுலகுடை யாளை யுணர்ந்திலையே .... *
கண்மைக் குவளை யமிர்த ப்ரவாகக் கருணைகண்டும் .... *
வன்மைக் கடலும் வறுமைக்கு ஏராய்நின்ற வன்னெஞ்சமே. ௫௫

நெஞ்சக் குளேயெங்ஙன் வைப்பே னுன்பாத நினைந்துபுலன் *
அஞ்சுக்குளே யொன்றுக் காணுலுமில்லை யறிவுகெட்டேன் .. *
நஞ்சுக்குளே நல்லதுண்டோ வெண்டோ ளெந்தை நாணிலவு *
பிஞ்சுக்குளே சிவப்பூட்டிய தாட்டுணைப் பெண்கொடியே.(௫௬)

கொடியேன்மனமுங் குழையேனுன்பேர்சொல்லிக் கூப்பிட்டுன்
படியேனினியெப்படிபிழைப்பேன்யமன்பாசம்விட்டால் [சீர்ப்
அடியேன் விடுவிடென் றப்போ தடிக்கு மடிவிலக்கி...... *
மிடியேனை யம்மவுலகே யெவ்வாறு விடுவிப்பையே.... (௫௭)

விடுபோர்த்தவ னென்னடியா னென்றோடி விலக்குவையோ.. *
கொடுபோய் நரகிற் குளிப்பாட்டு போவென்று கூறுவையோ *
அடுபோரயின் முத்தலை வேனமன்செயு மாக்கினைக்குட் .... *
படும்போதினென் சொல்லுவா யுலகேயுன் பராக்கொழிந்தே.௫௮

ஒழிவாய்த்தவம் விட்டிலையாரொன் னம்மை யுலகடியார்...... *
விழிவாய்ப் படுஞ்செவி வெவ்வா யராவெள்ளி வெற்பறுபட்.. *
டழிவாய்ப் பகிரண்டத் தாயிர கோடி யடுக்கு முந்நீர்க் .. *
குழிவாய்ப்புனலிற் குலைவாய்க் கிடந்து குழம்பினுமே... (௫௯

குழக்கன் றலவை மலைப்பாரி சத்திற் குடியிருக்கும்........*
பழக்கன் றிருவுருப் பாதிசெய்தா யிந்தப் பாவிகண்ணீர் .. *
உழக்கன் றரியன்றெரு கோட்டை யுன்னிக்கண் ணோட்டைபட *
அழக்கன் றிய துன்பந் தீராய்கொ லுன்னடி யார்க்கன்றியே.

அன்றிற்பெயர்க்குன் றெறிந்தோனைப் பெற்ற வென்னம்மைதமி
குன்றிற் பிறந்த குழந்தைமந்தா நிலங் கொம்பனையார் .. [ழ்க்
மூன்றிற் புறந்தவழ் சிங்கைக்கந் காதர மூர்த்தியிடம்......*
ஒன்றிற் சிறந்தது வேகுடி யாய்வந் துறைந்தனளே ....(௬௧)

உறைக்குங் கனன்மூத் தலைவேல் வலந்திரித் தாழ்திற்கும்....*
இறைக்குந் தெளிதற் கெளியதன் றேயுலகீன்ற வன்னை......*
நிறைக்கும் புவனந் திரோதாயி மாயையி னின்றழுந்த....—*
மறைக்குந் திரும்ப வெளியாக்கு மிந்த மகத்துவமே....(௬௨)

மகமுந் தவமும் பயின்மலை யாசல வாணனெங்கோன்......*
அகமும் புறமு மமர்ந்திருப் பாய்பொரு ளார்ச்சிதமும்....*
சுகமும் பெறுகிலன் பொய்வாழ் விதென்று துறந்துமுய்யேன்*
இகமும் பரமுமிழ்ந்தே னெனக்கெ னினிப் பிழைப்பே. (௬௩)

பிழைத்தே னிதுவரைபொய்யோடுமெய்யும்பிதற்றி யொன்றோ
இழைத்தேன் வினைமட் டிலக்கில்லை யேயெளி யேனரகத்....*
துழைத்தேன் விடிவதுண் டோநின் கருணையுண் டாகிலுண்டாம்
மழைத்தே னரகத் துலகே பிடிப்பிது மாத்திரமே.... (௬௪)

திரம்போ லுடலை நினைந்திரை தேடித் திரிந்துநச்சு.... ....*
மரம்போ னெடுக வளர்ந்திருப்பார் புன் மனையிலொரு ....*
தரம்போ லிரண்டு தரநடந் தால்வைது தள்ளுவரோன்......*
றரம்போலென் னெஞ்சை யுலகே கவலை யறுக்கின்றதே. (௬௫)

அறுத்துப் பொருப்பைப் பிளந்தோர் பொருளை யருவிடைங்
கிறுத்துப் புறப்பட் டிறங்குதண் சார லிடத்துநின்று *[கோங்*
பொறுத்துச் சிவந்தநின் பொற்றாட் கடிமை புகுந்ததம்மே..*
மறுத்துப் பிறப்பில்லை யென்றுநன்று யென்மனத் தெண்ணியே.

எண்ணத்தி லேயுண்மை யென்னாமல் வேத மெடுத் துச்சொன்ன
வண்ணத்திலேயென்மனம்வைத்திலேன்கொங்கைவள்ளத் துப்பா
கிண்ணத்திலே சைவக் கன்றுக்கு வார்த்தவள் கீர்த்தியெல்லாம்[ல்
அண்ணத்தி லேநின் றழுதாறப் பாடிக்கொண் டாடிலனே. (௬௭)

ஆடிச் சிவந்த பதத்தார் பவளச்ச டாடவிபட் ....*
டோடிச் சிவந்த சரோருகத் தாளென் னுலகுமைவத்தாள்....*
சூடிச் சிவந்த தலையுமெக் காலமுந் தோத்திரங்கள்........*
பாடிச் சிவந்த கவிநாவும் பெற்றதென் பாக்கியமே,.... (௬௮)

பாக்கிய மாவ துலகெயுன் பங்கய பாதமெனும்.......... *
யோக்கிய வானென வோங்கிய வாழ்வென் றொருபிடியாய்....*
வாக்கிய வேத வழிநட வாமன் மயங்கிமலந்...............*
தேக்கிய தீவினைக் குள்ளே மனஞ்சென்று சிக்கியதே...(௬௯)

சிக்கென்ற கொங்கை யுலகேமெல் லென்று சிவந்தபதத் ....*
துக்கென்று வந்து தொழும்புசெய் வெனறந் தோற்றவெறும் *
பொக்கென்ற வாவிப் புலான்மீனுக் கேரிப் புனன்மடைவாய்க்*
கொக்கென்று நின்று குறிக்கின்ற தாற்றல்வெங் கூற்றமொன்றே.

ஒன்று மலச்சட மொன்பது புறலவ் வொன்பதினு ....*
நின்று மலச்செடி நாறுமெந் நேரமு நீர்விட்டனறைக்.......*
கன்று துடைப்பினுந் தீராது பாழ்த்த வருவருப்பி.........*
தென்று தவிழ்ப்ப துலகே நரக மிதினுநன்றே......... (௭௧)

நன்றாய் முடிந்த தடியேன் சரித்திர நான்செய்பிழை.. ....*
ஒன்றா யிரம்பதி னாயிர மாயொரு மிக்கவொரு ....*
குன்றாய் முடிந்தது சொல்லோ விரந்து குடியென்றுபோய் *
நின்றா யொதுங்க வுலகே பொதியி னிழலுக்குளே....(௭௨)

நிழலுங் குளிர்ச்சியு நீங்காப் பொருணை நெடுந்துறையாள்..*
அழலும் பசித்தழ லாற்றுமென் னுதவை யாதரித்தங் .... .*
குழலுங் கருத்து மிழைநூலைப் பாவிழைக் கூடுபெய்யுங்....*
குழலின் பயிற்சியு மொன்றாநன் றுமென குண்கதுயே. (௭௩)

கதிகாட்டி யென்னைப் புரப்பாள் கருணையுங் காட்டிநல்ல....*
மதிகாட்டி யுண்மை வழிகாட்டித் தன்மண வாளருக்குச்....*
சதிகாட்டி யொக்கநின் றூட்டிவித் தாளித் தனையுலக.......*
விதிகாட் டிலவித் திதைக்காட்டிப் பேறினி வேறில்லையே. (௭௪)

இல்லது முள்ளது நீயறி வாயுல கேவினைதான்...............*
வல்லது செய்யினு மற்றது நீயுன் மனம்பொறுத்து..........*
நல்லது செய்வ துனக்கே புகழ்தொண்ட ஞனுன்சித்தம்....*
அல்லது பின்னை யடியே னுனாத்தென்ன வாவதுவே.....(௭௫)

ஆவது மோர்பொரு ளாகா ததுமுல கம்மமண்மேல்.. ...*
சாவது மாறிச் சனிப்பது மூருஞ் சகடமென்னப்...........*
போவது மீள்வது மெல்லாமுன் சித்திரம் புன்மையன்றே..*
நோவது மேழை யுகப்பதும் வேறு றுவல்வதுமே.....(௭௬)

வதுவைத் திருமுன்றிற் பரதரின் கீழம்பி வைத்ததன்மேல் ..*
விதுவைப்புனைதொங்கல்வேணியின்மேல்வைத்தமென்மலர்த்தா
ரதுவைப்பெனவெண்ணமாட்டாமற்போய்க்கழுகாதியுண்ணும்
பொதுவைப் பொருளென் றுலகே யினையிடடுப் போறறுவனே.

போற்றும் வணங்கு முலகாளைத்தென்னம் பொருப்பொருபால்
நாற்று நிரம்பி நடைகாவும் பாய்ந்து நறுங்கனிசா ....*
றாற்று வளங்கெழு தெம்மாக் களாநிழ லுட்பொருளை......*
யாற்று நெடுந்துறை மேலிருப் பாள்செம்பொ னாலயத்தே.௭௮

ஆலையம் போதென் றிருந்தார் வணங்குல கம்மையைநான்....*
சாலையம் போதும் பகற்பொதும் பானுக் கதிரழுங்கு ......*
மாலையம் பொதுந் தொழுவே னெனக்கிது மாத்திரமே ....*
வேலையம் போதனுக் கென்பொருட் டாவில்லை வேலையுமே. ௭௮

வேலை யெடுத்துப் பொருப்பெறிந் தோனம்மை மென்கமலக்*
காலை யெடுத்துக் கருத்துள் வைத்தேனில்லை கல்வியின்சொன் *
மாலை யெடுத்துப் புனையேனென் சொல்வதம் மாவவதி ....*
யோலை யெடுத்துப் புறப்படுங் கூற்றுக் குனாயெடுத்தே.(௮௰)

எடுத்தபிறப்பிற் கதிபெறவேண்டி லெறிதிரைநீர் ....*
மடுத்தமுனிக்கு மணக்கோலங் காட்டி மலையமலைக் ....*
கடுத்ததலத்தி லிருந்தாளெனம்மை யவளைவெம்மை........*
கொடுத்தபசிக்குயிர் வெம்பிடுவீர்சென்று கும்பிடுமே. (௮௧)

கும்பத்தில் வந்தவன் போற்றுலகாள்பொற் குழைதடிந்து..*
விம்பத்தி னின்று விளையாடுங் கண்கள் விடக்குமரக் ....*
கம்பத் திருந்து வணங்காத பாவியைக் காத்துநல்ல ....*
சம்பத்து நல்கி யொழிப்ப தென்றோமனத் தாபத்தையே(௮௨)

தாபிக்குஞ் செய்கை தருமுயிர் காக்குந் தகைமைநல்கும்...*
கோபிக்குந் தன்மை கொடுப்பிக்கு மூதண்ட கோடியெல்லாம்
நாபிக்குள் வந்தவன் முன்னோனைக் கொண்டு நடப்பிக்கும்வாள்
சோபிக்குங் கண்கொண் டுலகாளென் பாசந் துடைப்பிக்குமே

துடைத்தா யிலைவன் கலிநோயை யென்னைத் தொழும்புசெய்யப்
படைத்தா யிலைவந்து பார்த்தா யிலையுள பள்ளத்தில்விட்.... *
டடைத்தா யிலையுன் கருணைப்ர வாகத்தை யைவரைவிட்.... *
டுடைத்தா யுலகம்ம நன்[illegible]பினியென் னுயி[illegible]ப்பயிரே.—(௮௪)

பயிரிட்டு வேலி பிரிப்பவர் போலிந்தப் பாழ்ம்பிறவிக்....-*
குயிரிட்டு வாழ்வொளித் தாயுல கேபக டேர்தியென்னைத் .... *
தயிரிட்ட காம்பிடை மத்தினைப் போல்லைத் தான்மறிப்பேன் *
அயிரிட்டவேலை யுலகீன்ற நின் றிருவாணையிட்டே..... (௮௫)

இட்டம் பிறிதிங் கிலையுலகே யெனக் கிந்திரனூர்.........—*
பட்டம் பெறுவது பாரமன் றேதம் பதவியிலே.........—*
நட்டம் புயனையு மாற்றி விப்பாரன் னவரிட்டதே.......... *
சட்டம் பலவுண் டுனைப்போற்றப் பெற்றவர் தாட்டிகமே(௮௬)

தாட்டா மரைதந் தருளுலகே பட்ட சஞ்சலங்கள்.........—*
கேட்டா ருருகுவர் கெட்டே னினியென் கிலேசமெல்லாம்— *
பாட்டா லுரைசெயிற் புட்டோலை கோடிபற் றுதகையோ.. *
ரேட்டா யிரம்வரி தீட்ட வல்லார்சற் றெழுதுவரோ..... (௮௭)

எழுதும் படியு முருவேற்றும் போற்று மினச்சுரும்பர்......*
கொழுதும் பரிமளக் கொந்தளை நீளக் குயிலுலகாள்........*
முழுதுங்கருணை புரிவாள் சனனமு மோசனமாம்..........*
பழுதுந் தவிருங் கெடுவீ ரெழுத்தோர் பதினஞ்சுமே.—(அ௯)

அஞ்சித் திரிந்து பெரியோரைக் காணி லயர்ந்து கெட்டேன்—*
கஞ்சிக் கலைந்து கவலைப்பட்டேன் சதங் கைத்திருத்தாட்.... *
பஞ்சிக் கிணங்கு மழியாக் கருணை பழுத்தவப..............*
ரஞ்சிப் பசும்பொ னருட்பாவ நாசத் திருச்சவுமே.... (௯௰)

இருக்குந் தலமிலை யோமுக்க ளாநிழ லெந்தையெல்லாம்.... *
முருக்குங் கடவுண் முழுத்தீ யுடம்பையுண் மோகத்தினால் ...*
உருக்கும் படியங் கிருந்தாய் பொறுத்தது வோவிறுகிப் —*
பருக்குங் குவிமுலை யாயுல கேன்றவுன் பச்சடம்பே .... (௯௧)

பச்சைப்படிவத் துலகே யிரண்டு படியுனக்குப்......— *
பிச்சைப் படிநெல்லுப் பெம்மா னளப்பது பேருலகம் .... *
இச்சைப் படிக்குன் னை வென்றோ வெனக்கிலை யென்னிவிந்தக்*
கொச்சைப் படிறன் பொருட்டா ல் ...க் குறைப்படியே. ௯௨.

படிக்குங் கவியின் பயனுகச் சொல்விற் படுத்துவினை ... — *
முடிக்கும் படியென் முயற்சி கொண்டோர் வண்டு மூச்செறிய *
வெடிக்குந் தொடைமைக் குழலுலகே யென்று வேதமெல்லாம்*
வடிக்கும் பெயரா யென்னுந் தழும்பெற வழுத்துவனே. (௯௩)

வழுத்த நினைக்கிலன் மாதுலகாளை யென்மண்டைமதி........*
யெழுத்தை வெறுப்பதினி யேதுகண்ட தெல்லாம் புசித்துக்—*
கொழுத்த விடக்குட லால்வந்த பாவமொர் கோடியென்னை . *
கழுத்தை முறிக்குஞ் சுமைப்பார மெத்தக் கனக்கின்றதே.(௯௪)

கனமுண்ட கூந்த லுலகே யுன்சன்னிதி காத்திருக்க ....*
மனமுண்டு பார்த்த வறுமை யொட்டாது வலியச்செய்யும் ..*
இனமுண்டு நீகொடுபோய் நெடுந்தூர மிவனை யங்கே....— *
தனமுண்டு காணென்றது கெட்டதுவுந் தடையுண்டதே. (௯௫)

உண்டார் கடல்விடந் தன்மண வாளரன் றுண்கையிலே...... *
கண்டா ளுலகம்மை கண்டத்தி லேமலர்க் கையைவைத்துக்.... *
கொண்டாள் பிறகங் கமுதான தென்பது கொண்டிவட்கு.... *
விண்டாலென் புன்கவி நன்கவி யாமென்று விண்டனனே. (௬௫)

விண்டல நின்ற சரற்கால சந்த்ரசு வேதமுக............... *
மண்டல முங்கைம் மலரொடுந் தோளில் வழிந்தரத்ந......... *
குண்டல மும்பொலி வாலப் பிராய குமாரத்தியாய்ச்...... *
செண்டலர் செங்கை யுலகாளென் னுவி ற்சிறந்தனளே... (௬௬)

சிறப்பார் சிறப்பி னுலகா ளடியவர் சிந்தைக்கென்னும்...... *
பிறப்பார் பிறப்பும் பெறுவார் தவமும்மப் பேறுதப்பி....... *
இறப்பா ரிறப்பு மிறவாமை வேண்டுமென் றில்லறத்தைத்.... *
துறப்பார் துறப்பு நகைக்கிட மானவித் தொண்டனுக்கே. (௬௭)

தொண்டைக் கனிவிள்ள வள்ளுகிர் வீணை தழாவ நெடுங்.... *
கொண்டைச் சொருக்குப் புறந்தாழ வோலைக் குழைதடவும் *
சண்டைக் கயலுஞ் சிவப்பேற மாதங்கி சாமளையாம்......... *
பண்டைப் படிவத் துலகா ளருள்வந்து பாவிக்குமே.... (௬௮)

பாலான வேலையிற் சிந்தாமணிமண்ட பத்தின் மறை......... *
நாலான பீடத்தை ஞானந்த மாயருண் ஞாயிறுபோல் .... *
மாலான தேவர்கள் காலான மஞ்சத்து வந்திருக்கும்......... *
மேலான வாழ்வையுங் கண்டேன் பொருளைக்கு மேல்புறத்தே.

மேலைக் கடவுளிடப் பாகமுந் துள்ளு வெள்ளருவி .... *
மாலைப் பொதிய வரைச்சார லுநின்ற வண்ணமுந் தாட்...... *
காலைக் கமலமுங் கல்யாண விக்ரக காந்தியும் பொன்......... *
ஞாலைக் குழையுங் குழற்காடும் வாழி யுலகம்மையே...... (ள)

உலகம்மைக்கலித்துறையந்தாதிமுற்றுப்பெற்றது.